www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Tsi 10T 06-01-2025

தென்காசி மாவட்டம்
முதல் திருப்புதல் தேர்வு - 2025
வகுப்பு - 10
தமிழ்

நேரம்: 3.00மணி மதிப்பெண்கள்: 100

குறிப்பு: i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக. 15x1=15

1. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் -
அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) இளங்குமரனார்

2. கட்டுரையைப் படித்து, ஆசிரியர் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார்.
-இத் தொடரில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகள்
அ) ஐ,ஆல் ஆ) ஆல்,கு இ) ஐ,கு ஈ) இன்,கு

3. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்
அ) குறுந்தொகை ஆ) கொன்றை வேந்தன் இ) திருக்குறள் ஈ) நற்றிணை

4. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

5. 'சதாவதானம்' என்னும் கலையில் சிறந்து விளங்கியவர்
அ) பரஞ்சோதி முனிவர் ஆ) கண்ணதாசன்
இ) செய்குதம்பிப் பாவலர் ஈ) வீரமாமுனிவர்

6. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர்.
-இத்தொடருக்கான வினா எது?
அ) கரகாட்டம் என்றால் என்ன?
ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?
ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

7. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ----
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

8. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித்தொடர் உணர்த்தும் பொருள் -
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

9. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் முறையே
அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

10. மேன்மை தரும் அறம் என்பது ---
அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம்செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

11. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்
-இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது
அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

*"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின் பெருமை*
*எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரை விரிக்கும்?*
*முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்*
*விந்தை நெடுநிலைப்பும் வேறோர் புகழுரையும்"*

12. 'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

13. 'செந்தமிழ்' என்பது
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

14. உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?
அ) தம் தாயை ஆ) தமிழ்மொழியை இ) தாய் நாட்டை ஈ) தம் குழந்தையை
15. வேறோர் புகழுரையும் - இத்தொடரில் 'வேறோர்' என்பது
அ) தமிழர் ஆ) சான்றோர் இ) வேற்று மொழியினர் ஈ) புலவர்

பகுதி – II (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. **4x2=8**
**21** ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க
அ) ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும்.
ஆ) சாலைகளில் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையான விதி.
17. ஹிப்பாலஸ் பருவக் காற்று குறித்து எழுதுக.
18. அவையம் - குறிப்பு வரைக.
19. 'இறடிப் பொம்மல் பெறுகுவீர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
20. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
21. பாடலோடு பொருந்தாத இசையால் பயனில்லை என்னும் உவமையைக் கொண்ட திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. **5x2=10**

22. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதி ஆனது எவ்வாறு?
23. வெண்பாவின் ஓசையையும் ஆசிரியப்பாவின் ஓசையையும் எழுதுக.
24. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.
25. கலைச்சொற்கள் தருக. அ) Aesthetics ஆ) Emblem
26. முல்லை நிலத்திலும் மருத நிலத்திலும் கிடைக்கும் உணவுப்பொருள்கள் யாவை?
27. பழமொழிகளை நிறைவு செய்க.
அ. ஒரு பானை ........................ ஆ. அளவுக்கு மிஞ்சினால் .................
28. 'பொறித்த' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பகுதி – III (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க. **2x3=6**

29. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ" – குறிப்பு வரைக.
30. சங்க இலக்கியம் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
31. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். எடுத்துக்காட்டாக கோதுமையை எடுத்துக் கொள்ளின் அதில் சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற் கோதுமை முதலிய சில வகைகளேயுண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரச் சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள் வகைகள் உள்ளன.
அ) தமிழ்நாடு பொருள் வளமுடையது என்பது எதனால் விளங்கும்?
ஆ) கோதுமையின் வகைகளைக் குறிப்பிடுக.
இ) தமிழ்நாட்டு நெல்லின் வகைகளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க **2x3=6**
**34** ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
33. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?
34. அடிபிறழாமல் எழுதுக.
"செம்பொ னடிச்சிறு" எனத் தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்ப் பாடல்.
(அல்லது)
"மாற்றம் எனது" எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க. 2x3=6

35. 'கண்ணே கண்ணுறங்கு
காலையில் நீயெழும்பு
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு
பாடினேன் தாலாட்டு
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு'' இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. அலகிட்டு வாய்பாடு தருக.
பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க 5x5=25

38. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு ஒரு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

(அல்லது)

ஆ) பாடப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

39. அ) மழை வெள்ளப் பாதிப்புகளிலிருந்து தற்காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து உன் தோழருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்'' எனும் உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. வீட்டு எண்.72, குறிஞ்சி நகர், தென்காசி மாவட்டத்தில் வசித்து வரும் அறிவரசனின் மகள் யாழினிக்காக, கொடுக்கப்பட்டுள்ள பணிவாய்ப்புக்கான தன்விவரப் படிவத்தை நிரப்புக.

42. அ) வானொலி அறிவிப்பைக் கேட்ட நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.
1. புயலின்போது வெளியே செல்ல மாட்டேன்.
2.
3.
4.
5.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்க்க.
1. Education is what remains after one has forgotten what one has learned in School. – Albert Einstein
2. Tomorrow is often the busiest day of the week. – Spanish Proverb
3. It is during our darkest moments that we must focus to see the light. – Aristotle
4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பகுதி – V (மதிப்பெண்கள் : 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க **3x8=24**

43. அ) தமிழின் சொல்வளம் குறித்தும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகள் எழுதுக.

(அல்லது)

ஆ) நெகிழிப்பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

44. அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

(அல்லது)

ஆ) "கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே:" என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம். அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.
முன்னுரை – தமிழன் அறிவியல் முன்னோடி - விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் – விண்ணியல் அறிவில் நமது கடமை - முடிவுரை.

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.
குறிப்புகள்: பல்வேறு அரங்குகள் - பொழுதுபோக்கு – அங்காடிகள் - உணவு அரங்குகள்

*****

சிவக்குமார். மு, ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப,
வல்லம்-627809, தென்காசிமாவட்டம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# பணிவாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல்

1. பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த நாள் மற்றும் வயது :
4. தேசிய இனம் :
5. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :
6. வீட்டு முகவரி :
7. தொலைபேசி/அலைபேசி எண் :
8. பத்தாம் வகுப்பில் பெற்றமதிப்பெண்கள் :
9. தாய்மொழி :
10. பயின்ற மொழிகள் :
11. தட்டச்சு :
12. கணினி :

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென் உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் ____________________ பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com